அதிகாரிகளைக் கேட்டபோதும், அங்குள்ள தமிழகத்தைச் சேர்ந்த அமைச்சர்களை விசாரித்தபோதும் அவ்வளவுபேர் அங்கே சிறையிலே இருப்பதாக யாரும் ஒப்புக்கொள்ளவில்லை. இருந்தாலும்கூட, வேலைவாய்ப்பு என்ற ஒரே ஒரு காரணத்திற்காக எந்தவிதமான கட்டுப்பாட்டிற்கும் அடங்கி நடக்கின்ற வகையில் சிலபேர் அங்கே சென்று சிக்கிக்கொள்கிறார்கள். அப்படிச் சிக்கிக்கொண்டவர்களை விடுவிக்க வேண்டிய அந்தப் பணியைத் தமிழக அரசு மத்திய அரசுமூலமாக மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

112—

தடுப்பணை

***477—திரு. கே.பி. இராமசுவாமி:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் தடுப்பணை அமைத்து மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் தடுப்பணை அமைத்து மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் ஏற்கெனவே அரசால் பரிசீலிக்கப்பட்டு அரசாணை (நிலை) எண் 142, எரிசக்தித் (ஏ3) துறை, நாள் 4–9–1999–ல் திட்ட ஒப்புதல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலைப் பகுதியானது 280 சதுர கிலோ மீட்டர் சுற்றளவு கொண்ட, 264 குக்கிராமங்களை உள்ளடக்கிய, 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியாக உள்ளது. அங்கே

2007 ஏப்ரல் 23]

நம்முடைய அமைச்சர் அறிவித்ததைப்போல தலைவர் கலைஞருடைய கடந்த ஆட்சிக் காலத்திலே அந்தத் திட்டப் பணிகள் மேற்கொள்ளலாம் என்று ஆணை பிறப்பித்தும் இதுவரை அங்கே பணிகள் நடைபெறவில்லை. ஆகவே, கூடியவிரைவிலே அந்தப் பணிகளை நிறைவேற்ற வேண்டும். மழைக் காலங்களிலே கீழேயிருந்து மலைக்குச் செல்கின்ற அந்த மின்சாரப் பாதையிலே அடிக்கடி மரங்கள் எல்லாம் விழுகின்ற காரணத்தினால் அங்குள்ள மலைவாழ் மக்களுக்கு மின்தடை ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது. ஆகவே, அந்தத் திட்டத்தை விரைவாக நடத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை தமிழக அரசு அமல்படுத்துவதற்காக, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தின் முதல்நிலை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை அமல்படுத்தினால், தமிழகத்திற்கு 0 கோடியே 46 இலட்சம யூனிட்டுகள் மின்சாரம் கிடைக்கும். இதற்காக தமிழ்நாடு மின்சார வாரியம், 63 கோடியே 41 இலட்சம் ரூபாயில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பணிகளையெல்லாம் தொடங்கியிருக்கிறது. சுற்றுப்புறச் சூழல் துறையினுடைய இரண்டாவது அறிக்கையை தமிழக அரசு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அந்த அறிக்கை கிடைத்தவுடன் பணிகள் தொடங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

திரு. கே.பி. இராமசுவாமி: நன்றி கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நாமக்கல் மாவட்டத்திற்காக கூறியதுபோல, கோவை மாவட்டத்திற்குட்பட்ட உடுமலைப் பகுதி அருகிலே அமராவதி அணை உள்ளது. கேரளாவில் இருந்து

உற்பத்தியாகி வருகின்ற பாம்பாறு என்ற அந்த நதியின்மூலமாக அமராவதிக்கு வரும் பகுதியில் Upper Amaravathy என்ற ஓர் இடம் உள்ளது. அந்த இடத்திலே உயரமான பகுதியிலே இருந்து தண்ணீர் விழுகிறது. அங்கே மின்சாரம் எடுக்கவேண்டி ஏற்கெனவே கடந்த கால கட்டங்களில் முயற்சி மேற்கொண்டு, விண்ணப்பித்து அரசினுடைய பரிசீலனையில் உள்ளதாகக் கூறினார்கள். மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செய்யக்கூடிய அந்தத் திட்டம்மூலமாக மின்சாரம் எடுத்தால், நம்முடைய மின்சார உற்பத்தியும் அதிகமாகும், தண்ணீரும் எந்தத் தடங்கலுமின்றிக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திலேகொண்டு, முன்னுரிமை அடிப்படையிலே மத்திய மாநில அரசுகள்மூலமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தர முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சா அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கொல்லிமலையிலே தடுப்பணை கட்டுவதற்கும், அதன்மூலம் மின் உற்பத்தி செய்வதற்குமான திட்டம்தான் அரசின் பரிசீலனையிலே உளளது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தத் திட்டத்தைப் பற்றி, மின் வாரியம் ஆய்வு செய்து, அங்கே மின் உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்குமானால், உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு இந்த அரசு முயற்சிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனாமருதூரில் பீமன் நீர்வீழ்ச்சியில், மிக உயரமான இடத்திலே இருந்து தண்ணீர் விழுகின்ற நிலையிருக்கின்றது. அங்கே மலைவாழ் மக்கள் பயன்படக்கூடிய வகையிலே ஒரு மின் உற்பத்தி நிலையம அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

2007 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்திலே சாத்தனூர் அணை மூலமாக வருகின்ற தண்ணீரைப் பயன்படுத்தித்தான் 7.5 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்துகொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்த நீர்வீழ்ச்சியில், எத்தனை காலத்திற்குத் தொடர்ந்து தண்ணீர் விழுந்துகொண்டிருக்கும், அதன்மூலம் எவ்வளவு மின்சாரம் தயாரிக்கப்படும் என்பதைப் பற்றியெல்லாம் ஆய்வு செய்ய வேண்டிய நிலையிலே இருக்கிறோம். அது குறித்து, அதிகாரிகளை அனுப்பிவைத்து ஆய்வு செய்து, குறைந்தது ஓர் ஆறு மாத காலத்திற்காவது அந்த நீர்வீழ்ச்சியிலே தண்ணீர் வருமானால், அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

113—

தனிச் சந்தை

***16814—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இயற்கை உரங்கள்மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைத் தர நிர்ணயம் செய்து தனிச் சந்தையை ஏற்படுத்தி, விவசாயிகள் உபரி வருமானம் ஈட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இயற்கை உரங்கள்மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைத் தர நிர்ணயம் செய்து உரிய சான்றுகள் வழங்க தமிழகத்தில் தனித் துறை ஒன்று தொடங்க தமிழக அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது. இதற்குரிய பிரேரணைகள் விதைச் சான்றளிப்புத் துறைமூலம் பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.